# மாலை முரசு

பக்கங்கள் 18+ 03


## உழவு இயந்திரம் கவிழ்ந்து 15 வயது சிறுவன் மரணம்!



தனது தாத்தாவுடன் வயலுக்குச் சென்ற 15 வயது சிறுவன் உழவு இயந் திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார். 03


முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 29 சனிக்கிழமை 15.11.2025 | அதிர்வு 109



'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# அரசுக்கு எதிரான பேரணி: சுமந்திரனைச் சந்தித்து விளக்கிய நாமல் எம்.பி.

## மொட்டுவின் செயலர் சாகரவும் பங்கேற்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இன்று காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனை அவரது கொழும்பு அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். 03



# காதலியான 16 வயது மாணவியைக் கழுத்தறுத்து கொலை செய்த 27 வயது இளைஞர் உயிர்மாய்ப்பு!

## கம்பளையில் பயங்கரம்

காதல் விவகாரத்தால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 16 வயது பாட சாலை மாணவியைக் கொலை செய்தார் எனக் கூறப்படும் 27 வயது இளைஞர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுகின்றது.

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புப்புரஸ்ஸயில் பகுதியிலேயே நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற 03





# கடல் சீற்றத்தில் சிக்கி இரு படகுகள் விபத்து!

## அதில் பயணித்த ஐவரில் ஒருவர் வைத்தியசாலையில்

(வி.ரி. சகாதேவராஜா)

சமகாலத்தில் நிலவும் அசாதாரண காலநிலை மற்றும் இயந்திரக் கோளாறு காரணமாக காரைதீவு ஆழ்கடல் இயந்திரப் படகுகள் இரண்டு கடலில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்தப் படகுகள் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறிலினுடையது எனத் தெரிகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு ஏறாவூர் – சவுக்கடி கடல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

காரைதீவில் இருந்து வாழைச்சேனை துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருந்த இரண்டு படகுகளே விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது இரண்டு படகுகளில் காரைதீவைச் சேர்ந்த ஐந்து பேர் பயணித்துள்ளதுடன் அவர்கள் தெய்வாதீனமாக பத்திரமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களில் ஒருவருக்குக் காலில் பலத்த வலி மற்றும் காயம் ஏற்பட்டிருந்தது

அவர்கள் சவுக்கடி மீனவர்களால் இன்று அதிகாலை 1.10 மணியளவில் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர். காயமுற்ற படகோட்டி அதிகாலை 1.35 மணியளவில் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

விபத்துக்குள்ளாகிய படகுகளை மீட்க உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், பலத்த அலை நீரோட்டம் கொந்தளிப்பு காரணமாக அவை கரை தட்டின.

இரண்டு படகுகளில் ஒரு படகின் இயந்திரம் ஏற்கனவே பழுதான நிலையிலேயே அந்தப் படகைக் கட்டி இழுத்துச் சென்று கொண்டிருந்தது. அடுத்த படகும் சவுக்கடி கடற்பிரதேசத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு காற்றில் அடித்து சவுக்கடியில் தரை தட்டியது.

இந்த விடயம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸாருக்கு ஏறாவூர் மீனவர் அமைப்பின் தலைவர் தெரிவித்ததையடுத்து உடனடியாக நள்ளிரவே சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்த பொலிஸார் விடயத்தைக் கேட்டறிந்தனர்.

விபத்துக்கான காரணம் இயந்திரக் கோளாறு மற்றும் கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் சூழ்ந்திருந்த காலநிலை மாற்றம் எனத் தற்போது வரை அறியமுடிகின்றது.











# கடல் சீற்றத்தில் சிக்கி கரையொதுங்கிய மற்றுமொரு ஆழ்கடல் இயந்திரப் படகு!

**(வி.ரி.சகாதேவராஜா)**

சமகாலத்தில் நிலவும் கடல் சீற்றத்தில் சிக்கி மற்றும் ஒரு ஆழ்கடல் இயந்திரப் படகு காரைதீவில் கரையொதுங்கியது.

இந்தச் சம்பவம் இன்று சனிக்கிழமை காலை காரைதீவு கடற்படை முகாமுக்கு பின்னாலுள்ள கடற்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் படகு சாய்ந்தமருதைச் சேர்ந்த ஜலீல் என்பவரினுடையது எனத் தெரிகின்றது.

விபத்துக்குள்ளான படகை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏலவே நேற்று இரவு காரைதீவு ஆழ்கடல் இயந்திரப் படகுகள் இரண்டு கடலில் விபத்துக்குள்ளாகி ஏறாவூர் – சவுக்கடியில் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

## காதலியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளது.

திருகோணமலையில் தொழில் புரிந்த மேற்படி இளைஞர் நேற்று இரவு வீடு திரும்பியுள்ளார். இவரின் காதலி எனக் கூறப்படும் 16 வயது மாணவி தங்கி இருந்த அறைக்குச் சென்று கழுத்தறுத்து அவரைக் கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அதிக இரத்தக் கசிவு காரணமாக அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார். இதையடுத்து சந்தேகநபர் தப்பி யோடியுள்ளார்.

இன்று காலை கொழுந்து மடுவமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் பயன்படுத்திய தொலைபேசியும் அருகில் உடைந்த நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள பொதுப் பேரணி குறித்து விளக்குவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரைத் தாம் சந்தித்தார் என்று சந்திப்பின் பின்னர் நாமல் எம்.பி. கூறினார்.

அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளமை மற்றும் எதிர்க்கட்சிப் பேரணியில் முன்னிலைப்படுத்த விரும்பும் முக்கிய பிரச்சினைகள் குறித்து சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது என்றும் நாமல் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தப் பேரணியில் பங்கேற்காது என்றாலும், எதிர்க்கட்சியின் முக்கிய அங்கமான அந்தக் கட்சிக்கு இந்த விடயம் குறித்துத் தெரியப்படுத்துவது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை மேலும் ஒத்திவைக்காமல் நடத்த வேண்டியதன் அவசியத்தை தானும் சுமந்திரனும் ஒப்புக்கொண்டனர் என நாமல் எம்.பி. மேலும் கூறினார்.

மாகாண நிர்வாகத்தை வலுப்படுத்த அரசமைப்பின்படி இந்தத் தேர்தலை நடத்துவது மிக முக்கியம் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் கலந்து கொண்டார்.

## உழவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் துயரச் சம்பவம் பொலனறுவை – மனம்பிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த தாத்தாவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு 7.30 மணியளவில் மேற்படி சிறுவன் தனது தாத்தாவுடன் வயலுக்குச் சென்று வீடு திரும்பி கொண்டிருந்தபோது அவர்கள் பயணித்த உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனம்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி தலைமை ஆய்வாளர் பி. ஜி.எஸ்.ஜி. அரியரத்ன தலைமையிலான அதிகாரிகள் குழு இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதற்காக கால அவகாசம்?

வடக்கு - கிழக்கு அரசியலில் மட்டுமல்லாமல் தென்னிலங்கை அரசியலிலும் இப்போது பெரும்பாலும் பிரதான பேசு பொருளாக இருப்பது மாகாண சபைத் தேர்தல் விவகாரம் தான்.

அரசாங்கம் நினைத்தால் - விரும்பினால் - ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனிநபர் பிரேரணையாக முன்வைத்துள்ள சட்ட மூலத்தை சபையில் எடுத்து, அடுத்த ஒரு மாதத்திற்குள் அதனை நிறைவேற்றுவதன் மூலம் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து, அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்குள் அந்தத் தேர்தலை நடத்தி முடித்து விட முடியும். ஆனால் வேறு காரணங்களைக் காட்டி அதனை இழுத்தடித்து வருகின்றது தேசிய மக்கள் மத்திய அரசு.

அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடனும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுடனும் உரையாடிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தமக்குச் சற்றுக் கால அவகாசம் தேவை என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டிருந்தார்.

கால அவகாசம் கேட்பதற்கு சட்ட ரீதியான அடிப்படைகள், தேவைகள், நெருக்கடிகள் இல்லை என்பதை அச்சமயத்தில் சுமந்திரன் சுட்டிக் காட்டிய போது, ஆயினும் தமக்கு காலம் தேவைப்படுவதாக ஜனாதிபதி வலியுறுத்தித் தெரிவித்திருக்கிறார்.

ஆக, ஜனாதிபதிக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசியல் ரீதியான கால அவகாசம் தேவைப்படுகின்றது என்பது வெளிப்படையானது. அரசியல் ரீதியாக அவருக்குத் தேவைப்படும் கால அவகாசம் எதற்காக என்ற கேள்வி எழுகிறது.

தமது அரசின் அரசியல் செல்வாக்கு சரிந்து செல்ல முன்னர் தேர்தலை எதிர்கொள்வதுதான் இன்றைய நிலையில் அவருக்கு உகந்ததாக இருக்கும். ஆனால் அப்படி இருந்தும் அவர் கால அவகாசம் எடுக்கின்றார்.

இது, நாட்டில் மக்களிடையே தமது தரப்பின் அரசியல் செல்வாக்கை உறுதிப்படுத்துவதற்காக - அல்லது உயர்த்துவதற்காக - அவர் எதிர்பார்க்கும் கால அவகாசம் அல்ல. கட்சிக்குள் தமக்கு இருக்கும் நெருக்கடிகளைச் சமாளித்து, தமது முடிவுக்கு கட்சியின் முழுமையான ஆதரவை வரித்துக் கொள்வதற்காக அவர் எதிர்பார்க்கும் - தமக்குத் தேவைப்படுவதாக அவர் கருதும் - கால அவகாசம்.

ஆனால் மாகாண சபை முறைமை மற்றும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான பேரினவாத மேலாண்மை வெறிப் போக்கில் ஊறிக் கிடக்கும் மூலங்கள் ஜனாதிபதியின் ஜே. வி. பி. கட்சியின் முக்கிய பதவிகளை கைப்பற்றி வைத்திருக்கின்றன. இது விடயத்தில் - மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தில் - அவற்றை சமாளித்து, மனம் மாற்றி, மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முயற்சிக்கு ஆதரவாக மாற்றுவது என்பது சாத்தியப்படும் விவகாரமாகத் தெரியவில்லை.

ரில்வின் சில்வா போன்ற மாகாண சபை முறைமைக்கு கடும் எதிர்ப்பு போக்குடையோரை மனம் மாற்றி, இந்தத் தேர்தலை நடத்தும் தமது முயற்சிக்கு இணங்க வைக்கலாம் என்று கருதி ஜனாதிபதி காத்திருக்கின்றார் என்றால் அது, 'அலைகள் ஓய்ந்த பின்னர் குளிக்கலாம் என்று கடற்கரையில் காத்திருப்பதற்கு' ஒப்பானதுதான்.



# திடமாகச் செய்தியொன்று கூறும் வடமாகாண மரநடுகை மாதம்...!

நம்மிரு கரம் பற்றி
நாளொரு வரம் கிட்ட
நாமொரு மரம் நடுவோம்

நிலமெலாம் ஈரம் செறிந்த
நீத்தவர் வீரம் செப்பும்
நம்மவர் ஈகம் சொல்ல

காத்தவர் வாசம் வீசும்
கார்த்திகை மாதம் முழுதும்
காற்றைச் சுவாசம் செய்வோம்

ஆண்டவர் மாண்டவர் தேசம்
ஆண்டாண்டாய் அவர்நாமம் பேச
ஆளுக்கொன்றாய் நடும் மரம்

களமாடி மாண்டவர் தியாகம்
தடமாகச் சந்ததி சேர
திடமாகச் சேதியொன்று கூறும்

நாளுக்கொரு வரமும் தரும்
திடமாகச் செய்தி கூறும்
வடமாகாண மரநடுகை மாதம்!

- மகேசன் கஜேந்திரன்.





# இங்கினியாகலையில் கவனிப்பாரற்று கிடக்கும் பழம்பெரும் முருகன் ஆலயம்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இங்கினியாகலையில் கவனிப்பாரற்ற நிலையில் பழம்பெரும் முருகன் ஆலயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இங்கினியாகல பிரதேசமானது தமிழர் தம் வாழ்வியலை சிறப்பாக கொண்டு வாழ்ந்த பிரதேசமாகும். 1983 நாட்டில் நிலவிய இனமுறுகல் நிலைமையைடுத்து அங்கிருந்த தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வெளியேறினர்.

தமிழ் மக்கள் அங்கிருந்ததைச் சான்றுப்படுத்தும் ஒரே ஆதாரமாக அங்கு இன்றும் அந்த பழம்பெரும் முருகன் ஆலயம் போதிய பராமரிப்பின்றி இருக்கிறது.

இன்று தமிழரே இல்லாத பெரும்பான்மையினர் மாத்திரமே உள்ள இடத்தில் உள்ள குறித்த முருகன் ஆலயத்தை யார் கவனிப்பார்கள்? என்று உலக இந்துக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் வளத்தாப்பிட்டி சமூக செயற்பாட்டாளர் காந்தன் கூறுகையில்,

இன்று இவ்வாலயம் காணப்படும் நிலை நம் கண்களில் கண்ணீரை வரவைக்கின்றது. இன்று எம்மவர்கள் கோபுரத்துக்கு மேல் இன்னும் ஏதாவது கட்டலாமா என்று சிந்தித்துக்கொண்டிருக்கின்றார்களே தவிர, இவ்வாறு எம் இனத்தின் அடையாளங்களை பறைசாற்றும் முழுமையான சிங்களவர்கள் மாத்திரம் காணப்படும் இவ்வாறான பிரதேசத்தில் காணப்படும் ஆலயங்களுக்கு தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்கி அவற்றை புத்துயிர் பெற செய்வதற்கு முன்வராமல் இருப்பது வேதனையான விடயம் .

பேரன்புக்கு உரிய முருகப்பெருமானின் மெய்யடியார்களே இனியும் தாமதிக்காமல் எம்முப்பாட்டன் தமிழர்களின் தலைமகனின் ஆலயத்தை பாதுகாக்க வேண்டுகிறேன்.

தற்போது இந்த ஆலயத்தை சிவஸ்ரீ துரையப்பா மதன் சர்மா தம்மால் முடிநடதவரை பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தம் நிரைந்த கருப்பந்தைல மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்!



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா ஹப்புகஸ்தனை தோட்ட பகுதியில் அமைந்துள்ள ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான வர்த்தக நிலையம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள சுமார் 200 அடி உயரம் கொண்ட 4 கருப்பந்தைல மரங்கள் உள்ளன.

இந்த மரங்களால் எந்த நேரத்திலும் பாரிய உயிர் சேதங்கள் ஏற்படும் என்று அந்த பகுதியில் உள்ள ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இந்த மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தோட்ட நிர்வாகம் மஸ்கெலியா பிரதேச சபை, நோர்வூட் பிரதேச செயலாளர், இந்தப் பகுதிக்கு பொறுப்பான அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தும் பலன் இல்லை என்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி உடன் அப் பகுதியில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.








# தென்மராட்சி இலக்கிய அணி நடத்திய பாரதி விழாவும் அஞ்சலி நிகழ்வுகளும்

## கம்பவாரதி ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம்

(த.சுபேசன்)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்திய பாரதி விழாவும் அண்மையில் அமரத்துவமடைந்த கவிஞர் த.நாகேஸ்வரனின் அஞ்சலி நிகழ்வும் அண்மையில் தென்மராட்சி கலைசார மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வானது எழுத்தாளர் திரு. திருமதி நா. துசாந் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றலுடனும், திருமதி நாமகள் நேரித்தனின் கடவுள் வாழ்த்துடனும் சமய முறைப்படி ஆரம்பமாகியது.

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்ற கவிஞர் த.நாகேஸ்வரனுக்கான அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையை கம்பநேசன் ஆ.வாசுதேவா நிகழ்த்தியிருந்தார்.

அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து கம்பவாரதி ஈ.ஜெயராஜ் தலைமையில், "பாரதியிடம் இருந்து இன்றைய அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டியது இனப்பற்றையே அல்லது தேசப்பற்றையே" என்னும் தலைப்பில் பட்டிமண்டபம் நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது "இனப்பற்றையே" என்னும்தலைப்பின்கீழ்ச. லலிசன், வே.ஞான சம்பந்தன், லோ. துசிகரன் ஆகியோரும், "தேசப்பற்றையே" என்னும் தலைப்பின் கீழ் ந. விஜயசுந்தரம், பரா. ரதீஸ், த.கருணாகரன் ஆகியோரும் பட்டிமண்டபம் நிகழ்வில் தமது வாதங்களை முன்வைத்திருந்தனர்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள், இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

உலகளவில் ஆண்டுதோறும் நவம்பர் 14ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச நீரிழிவுதினத்தைமுன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று நேற்று நடைபெற்றது.

பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.கே. சனூஸ் காரியப்பர் தலைமையில் வைத்தியசாலை நீரிழிவு கட்டுப்பாட்டு பிரிவு மருத்துவ குழுவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், உள்ளிட்ட பலர் பங்கேற்று, பொதுமக்களுக்கு நீரிழிவு நோயின் அபாயங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நிகழ்வில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள், "நீரிழிவு நோய் உலகளாவிய சுகாதார சவால்களில் ஒன்றாக உள்ளது. வாழ்க்கை முறையில் மாற்றங்கள், ஆரோக்கியமான உணவு, தினசரி உடற் பயிற்சி, மற்றும் தற்காலிக மருத்துவ பரிசோதனைகள் மூலம் இதைத் தவிர்க்கலாம்" என்று வலியுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, பங்கேற்பாளர்களுக்கு இலவச இரத்த சர்க்கரைப் பரிசோதனை, உடல் எடை மற்றும் பி.எம்.ஏ. பரிசோதனை, உணவியல் ஆலோசனை, முதன்மை அடையாள அறிகுறிகள் பற்றிய விளக்கவுரை, மற்றும் நோயாளிகள் எதிர்கொள்ளும் தினசரி சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டன.

நீரிழிவு கட்டுப்பாட்டு பிரிவினரால் நீரிழிவு நோயின் காரணங்கள், அறிகுறிகள், தடுப்பு வழிமுறைகள் குறித்து பிரசுரங்களின் வாயிலாக விரிவான தகவல்கள் வழங்கப்பட்டன. பல பொதுமக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று பயனடைந்தனர்.

பிரதேச மக்களின் நலனை முன்னிறுத்தி பல்வேறு சுகாதார நிகழ்வுகளை நடத்துவதில் சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை தொடர்ந்தும் முன்னின்று செயல்படுகின்றது என பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வு, நீரிழிவு நோய் குறித்த பொது மக்களின் அறிவை மேம்படுத்தியதோடு, ஆரோக்கியமான வாழ்வியல் பழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும் வகையில் நடைபெற்றது.



அம்சன் கிருஸ்ணா,
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

# வகுப்பறை முகாமைத்துவம் வெற்றிக்கு வழிகாட்டி...!

முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தின் இலக்குகளை அடைய மனித, நிதி, பொருள் மற்றும் தகவல் வளங்களைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிநடத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற செயல்களை உள்ளடக்கிய ஒரு செயன்முறையாகும். இந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் வகுப்பறை முகாமைத்துவம் ஒரு ஆசிரியரால் திறம்பட நிர்வகிக்கப்படுகிறது.

வகுப்பறை முகாமைத்துவத்தின் நோக்கம்.

வகுப்பறை முகாமைத்துவம் என்பது கற்றல்-கற்பித்தல் மிகவும் வினைத்திறனுடன் நிகழக்கூடிய ஒரு சூழலைக் கட்டியெழுப்புவதற்கும், அதனை நடத்திச் செல்வதற்கும் தேவையான வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்குத் தேவையான உத்திகளைப் பயன்படுத்துவதற்கான முயற்சியாகும். இது கற்றலுக்கான உகந்த சூழலை உருவாக்குதல், ஒழுக்கத்தைப் பேணுதல், மற்றும் மாணவர்களின் கற்றல் அனுபவங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**ஆசிரியத்துவத்தில் வேறுபாடுகள்**

அனைத்து முகாமைத்துவ தந்திரோபாயங்களும் எல்லா ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக இருக்க முடியாது. கற்பிக்கும் முறைகள், கற்பித்தல் பாணி, ஆளுமை, மனப்பாங்கு, மாணவர் தொகை மற்றும் வளங்கள் போன்ற “சில விடயங்கள் வித்தியாசமானவை” என்பதால், ஆசிரியர்கள் வித்தியாசமான தந்திரோபாயங்களைக் கையாண்டு, அவை ஏற்புடையதா எனப் பார்த்து, தொடர்ந்து அவ்வழியே பயணிப்பது ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு வழிவகுக்கும்.

**வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியரின் கடமைகள்**

ஒரு வகுப்பறையை வெற்றிகரமாக நிர்வகிக்க ஆசிரியரின் கடமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன,

- வகுப்பறை முகாமைத்துவத்துக்கு உரிய ஆவணங்களை நடைமுறைப்படுத்தல்.
- மாணவரை இனங்காணல் மற்றும் வகுப்பறை ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தல்.
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பௌதீக மற்றும் மனித வளங்களைப் வினைத்திறனுடன் பயன்படுத்துதல்.
- பரிகாரக் கற்பித்தல் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சமூகத் தொடர்புகளை அன்னியோன்யப்படுத்தல்.

**வகுப்பறையில் ஆசிரியரின் வகிபாகம்**

வகுப்பறையில் ஆசிரியரின் வகிபாகம் பன்முகத்தன்மை கொண்டது.

- மாணவரின் கவனத்தை ஈர்த்து முழுவகுப்பையும் கற்றலின் பால் வழிப்படுத்துதல்.
- முன்னறிவை நினைவுபடுத்தி, தேடலுக்கு வழிகாட்டுதல்.
- மாணவர் தேடலில் ஈடுபட்டிருக்கும் போது, அவர்களின் இயலுமைகள், இயலாமைகள், வலிவுகள், நலிவுகளை இனங்கண்டு தேவையான முன் மற்றும் பின் ஊட்டல்களை வழங்குதல்.
- மாணவர் விளக்கமளிக்கும் வேளையில் நன்கு செவிமடுத்து, அவர்கள் தவறியவற்றை எடுத்துக்காட்டி, இறுதி விரிவுபடுத்தலில் பங்குபெறுதல்.
- கணிப்பீட்டின் மூலம் மாணவர் அடைந்த அறிவு, மனப்பாங்கு, திறன் மட்டங்கள் தொடர்பான சரியான முடிவை எடுக்க பின்னணியை உருவாக்குதல்.

**நேர் வகுப்பறை முகாமை**

நேரான வகுப்பறை முகாமை பெரிதும் விரும்பத்தக்கதாகும். இது,

- ஆசிரியர் தனது மாணவர்களை எந்தளவுக்கு கருத்தில் கொள்கிறார்.
- வகுப்பறைச் சூழலை ஒழுங்கமைக்கும் விதம்.

தொடர்ச்சி▼



# வகுப்பறை முகாமைத்துவம் வெற்றிக்கு வழிகாட்டி...!

தொடர்ச்சி▲

• நவீன தொழில்நுட்பம் பயன்பாட்டுடன் பாடத்தைக் கற்பிக்கும் திறன்கள்.

• மாணவர் நடத்தையைக் கையாளும் திறமை.

• மாணவரின் தனியாள் வேறுபாட்டில் கவனம் செலுத்துதல்.

• பல்தர, பலமட்ட, பல்தேர்ச்சிக் கற்பித்தலில் ஈடுபடுதல்.

• வாழ்நாள் கற்றலுக்குத் தூண்டுதல் மற்றும் சகபாடி மூலம் கற்க உதவுதல்.

• பிள்ளையின் அடைவு மற்றும் ஆற்றுகையை அதிகரிக்கச் செயற்படுதல்.

• ஆசிரியர்கள் வகுப்பறைக்குக் கொண்டு செல்லும் அறிவு, ஆற்றல், உளச்சார்பான மனப்பாங்குகள், விழுமியங்கள் பற்றி அறிந்திருத்தல்.

**வகுப்பறையில் ஒழுக்கத்தை பேணும் உத்திகள்**

வகுப்பறையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் எழுவதைத் தடுத்தல் மற்றும் நடப்பிலுள்ள பிரச்சினைக்கு முகங்கொடுத்தல் ஆகிய இரு நிலைப்பாடுகளும் ஆசிரியருக்கு உண்டு. இவற்றைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தப்படும் சில உத்திகள்,

• கவனக் குவிவு மற்றும் நேரடியாகப் போதனைக்குச் செல்லல்.

• கண்காணித்தல் மற்றும் முன்மாதிரியாகச் செயற்படல்.

• மனிதநேயத் தகவல்கள் மற்றும் நேர்நிலை ஒழுக்கம் பேண் நடவடிக்கைகள்.

• மாணவருக்குச் செவிமடுத்தல் மற்றும் பொருத்தமான பின்னூட்டல் வழங்குதல்.

கற்பித்தல் வளங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தளங்கள்,

• e-thaksalawa
• NIE
• E-Kalvi
• Emkavi.lk
• Vada primary
• LMDM Unit
• DP Education

வகுப்பறை முகாமைத்துவம் என்பது வெறுமனே ஒழுங்கைப் பேணுவது மட்டுமல்ல. இது கற்றலுக்கான சிறந்த தளத்தை அமைத்து, மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் ஒரு கலை. ஆசிரியரின் ஆளுமை, கற்பிக்கும் முறை, மற்றும் முகாமைத்துவத் திறன்கள் வேறுபட்டாலும், வகுப்பறை முகாமைத்துவ ஆவணங்களை நடைமுறைப்படுத்துதல், மாணவரின் தனியாள் வேறுபாடுகளில் கவனம் செலுத்துதல், நேர்நிலை ஒழுக்கத்தைப் பேணுதல் மற்றும் தேவையான வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் ஆகிய கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுவதன் மூலமே ஓர் ஆசிரியரால் வெற்றிகரமான வகுப்பறைச் சூழலைக் கட்டியெழுப்ப முடியும்.

கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்தி, மாணவர்களுடன் அன்னியோன்யமான சமூகத் தொடர்புகளைப் பேணி, ஆக்கபூர்வமான உத்திகளைக் கையாண்டு செயற்படும் ஆசிரியத்துவமே, ஒரு "கற்றல் சமூகத்தை" உருவாக்கி, மாணவர்களை வாழ்நாள் கற்றலுக்குத் தூண்டி, நாட்டின் வருங்கால மனித வளத்தை உருவாக்குவதில் வெற்றி காணும்.





யே. வினிதா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# மாட்டு வண்டியின் ஓசையில் மறைந்த காலம்!

மாட்டுவண்டி என்ற இந்த ஒரு சொல் பலரின் நினைவுகளைத் தூண்ட வைக்கும். மண் வழியாக மெதுவாக உருளும் இரு சக்கரங்களின் ஓசை, மாட்டின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் மணிகளின் சத்தம், வண்டியின் மீது அமர்ந்திருக்கும் பிள்ளைகளின் சிரிப்பு இவை அனைத்தும் ஒரு தலைமுறையினர் அனுபவித்த அந்தக் காலத்தின் பிரதிபலிப்புகள். மாட்டு வண்டி என்பது வெறும் போக்குவரத்து சாதனம் மட்டுமல்ல, அது ஒரு குடும்பத்தின் பெருமை வாழ்க்கையின் ஒரு அங்கமாகும்.

எந்த ஒரு வசதி வாய்ப்பும் இல்லாத அந்தக் காலத்தில் தமிழர்களின் போக்குவரத்து சாதனமாக மாட்டு வண்டிகள்தான் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. 1980 களின் நடுப்பகுதிவரை கிட்டத்தட்ட எல்லா விவசாயிகளதும் வீட்டிலும் மாட்டு வண்டில்கள்தான் விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. மாட்டுவண்டில்கள் விவசாயத்துக்கு மட்டுமல்லாது வணிகத்துக்கும் பயணங்களுக்கும் அவசர தேவைகளுக்கும் பேருதவியாக இருந்து வந்துள்ளன. இன்று வீடுகளில் கௌரவத்தின் அடையாளமாக கார், மோட்டார் சைக்கிள் இருப்பது போன்று அன்று மாட்டு வண்டிகளே இருந்தன. வசதி படைத்தவர்களிடம் மாட்டு வண்டிகளே இருக்கும், கோயில்கள் நெடுந்தூரப் பயணங்களென எதுவாக இருந்தாலும் மாட்டு வண்டி பயணம்தான்.

நெடுந்தூரம் செல்லும் மாட்டு வண்டிகளில் பாத்திரங்கள், சமையல் சாமான்கள் இருக்கும். இரவு பயணத்திற்கு வழிகாட்டுவதற்கு என அரிக்கன் விளக்கு தொங்க விடப்பட்டிருக்கும். கிராமத்து தெருக்களில் “ஜல்ஜல்” என்ற மாட்டின் கழுத்தில் தொங்கும் மணியின் ஓசையும், காலில் இருக்கும் குளம்பொலிகளின் சத்தமும் மாட்டு வண்டில்கள் வருகிறது என்பதை முன்கூட்டியே கிராமத்து மக்களுக்கு தெரிவித்து விடும்.

மாட்டு வண்டில்கள் தொடர்பான தன்னுடைய நினைவுகளை பொன்னி என்பவர் இவ்வாறு தெரிவிக்கிறார், என்னுடைய அப்பா “மாட்டு வண்டில் கட்டி வயல் நிலத்துக்குச் செல்லும் போது நாங்களும் வாறம் என அப்பாவிடம் கெஞ்சி வண்டில ஏறி விடுவோம். வண்டிலில் பயணம் போறது என்றாலே எங்களுக்கு பெரிய சந்தோசம். அப்பா வேலைகளை பார்க்க நாங்கள் எல்லோரும் சேர்ந்து நாவற்பழம், புளியம்பழம், இலந்தப்பழம் பறித்து சாப்பிட போயிடுவோம். அத்துடன் கோயில் திருவிழாக்கள் என்றால் வண்டி கட்டிக்கொண்டு முழு குடும்பமும் போய்விடுவோம். அந்தக் காலத்தில் பிள்ளைகளுக்கு மாட்டு வண்டில் சவாரி போறது என்றாலே ஒரு குதூகலம் தான்.”

இவ்வாறு அவர் கூறும் போதே அவருடைய முகத்தில் நினைவுகளுடன் சந்தோஷமும் தென்பட்டது.

மாட்டு வண்டி காரரான மாரிமுத்து என்பவர் மாடுகளுடன் தன் வாழ்க்கை பயணத்தை , அந்த அழகிய நினைவுகளை மீட்டிப் பார்த்து கூறுகிறார். தனியாக நீண்ட தூரம் பயணிக்கும் போது சந்தைக்கு பொருள்களைக் கொண்டு செல்லும் போது மாடுகளிடம் பேசிக்கொண்டே செல்வேன். என்னுடைய இரண்டு மாடுகளும் என்னுடைய பிள்ளைகள் மாதிரி. “கனதூரம் போக வேணும் எல்லோ என்னத்துக்கு நடை பயிலுகிறாய் வேகமாக போவேன்” என்று சொல்லி பூவரசம் தடியால் மாட்டின் முதுகை தட்டிக் கொடுப்பேன். சில வேளைகளில் என்னுடைய சொந்த விஷயங்கள் கவலைகளை மாடுகளுக்கு சொல்லிக்கொண்டே என் மனதை ஆற்றிக் கொள்வேன்.

தற்போதுள்ள வாகனத்துக்கும் மாட்டு வண்டியின் பயணத்துக்குமான அனுபவத்தை கண்ணன்

தொடர்ச்சி▼




# மாட்டு வண்டியின் ஓசையில் மறைந்த காலம்!

தொடர்ச்சி▲

இவ்வாறு பகிர்கிறார். இப்போ என் காரில் இருக்கும் பவர் ஸ்ரேறிங் எனக்கு பெரிய ஆச்சரியத் தைத் தருவதில்லை. ஆனால் அந்த ரெட்டை மாட்டு வண்டியை சாலைகளில் திருப்பும் போது ஒரு மாடு நடையை குறைத்த பின் மற்றொரு மாடு அழகாக திரும்பும் பாருங்கள். அப்போது அதை செய்ய லாவகமாக உதாரணத்துக்கு வலது பக்கம் திரும்ப வேண்டும் எனில், வலது மாட்டின் கயிற்றை இழுத்து பிடித்து இடது புற மாட்டின் கயிறை லூசாக விட்டு அதை லேசாக குச்சியால் தட்டி கொடுக்கும் போது, கயிற்றை இழுத்து பிடித்த மாடு, கயிறு இறுகும் காரணத்தால் கழுத்தோடு சேர்த்து தலையை சற்றே ஒரு புறமாக மேலே தூக்கிக் கொண்டு நடையை உள் வாங்கும். அப்போது அடுத்த மாட்டை பார்த்து, ‘சீக்கிரம் நீயும் திரும்பு’ என்பது போல் பார்க்கும். உடனே இடது புற மாடு பலது புறம் திரும்பி நடக்க ஆரம்பிக்கும். நான் கைந்து அடி சென்ற பின் இழுத்து பிடித்த ஒரு மாட்டின் கயிறாய் லூசாக விட்டோமானால் தானாக இரண்டு மாடுகளும் நேர் கோட்டுக்கு வந்து விடும்.

அதேபோல காலத்துக்குக் காலம் மாட்டு வண்டிகள் தொடர்பில் கவிதைகளும் எழுந்துள்ளன. நீல வானொலி “ஓ வண்டிக்காரா” கவிதை ஈழத்து மெல்லிசைப் படலாக மாறியது.

“ஓ என் அருமை வண்டிக்காரா
ஓட்டு வண்டியை ஓட்டு
போவோம் புதிய நகரம் நோக்கி
பொழுது போமுன் ஓட்டு”

கிராமிய சூழ்நிலைக்கும் மணவாசம் மாறாமல் இந்தக் கவிதையை எழுதியுள்ளார்.

“தமிழீழத்தின் தன்மானமுள்ள வண்டிக்காரன் விடுதலைப் புலிகளின் வீரத்தையும் தீரத்தையும் வியந்து பயணவெளிப் பாதையில் பாடுகிறான் இப்படி,

“நடடா ராசா மயிலைக் காளை நல்ல நேரம் வருகுது
நடடா ராசா சிவப்புக்காளை நாளை விடியப் போகுது (2)

பொழுது சாயும் நேரம் இது புலிகள் வாழும் தேசம்
பொழுது சாயும் நேரம் இது புலிகள் வாழும் தேசம்
நடடா ராசா....

ஈழக்கடலில் மோதும் அலைகள் என்ன சொல்லிப்பாடும்
இந்த நாட்டில் வீசும் காற்று என்ன சொல்லிப் பேசும் (2)

நீலமேகம் எங்கள் நாட்டில் நின்று பார்த்துப் போகும் (2)
நீங்கள் வெற்றி சூட வேண்டும் என்று வாழ்த்துக் கூறும்
என்றும் வாழ வாழ்த்தும்.....”

அதாவது நம் தேசத்தின் வரலாற்றுச் சூழ் நிலைக் கேற்ப இந்த மாட்டு வண்டில் பயணம் வெவ்வேறாக கவியைப் புனைய வைத்திருக்கின்றது.





# எமது மக்களின் இனப்பிரச்சினை தீர்வில் இந்த அரசு அக்கறை கொள்ளவில்லை!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்)**

வரவு - செலவுத் திட்டத்தின் 2 ஆவது வாசிப்புக்கான வாக்கெடுப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக தமிழீழ விடுதலை இயக்கத்தில் விசேட கூட்டத்தின் அடிப்படையில், தான் எதிர்த்து வாக்களித்துள்ளார் என்று அக்கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசு ஜனநாயக மீறல்களைச் செய்து வருகிறது. அவர்களின் அங்கத்தவர்களை வைத்து கிராமம் தோறும் அபிவிருத்திக் குழுவை உருவாக்கி செயல்பட முயல்கின்றது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு பிரதேச சபைகள், இனி வரவுள்ள மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கப்படவில்லை. மேலும் இராணுவத்துக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.அதை குறித்த வாசிப்பின் போது எதிர்த்துள்ளோம்.

கடந்த வருடம் நிதியை வடக்கிலே கூடுதலாக செலவழிப்பதாக கூறிய போதும் ஒரு வேலைத்திட்டமும் இடம் பெறவில்லை. தற்போது கிழக்கிலும் தமது அபிவிருத்தி பணியை முன்னெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது இந்த அரசு.

எங்களைப் பொறுத்தவரையில் எமது மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வில் இந்த அரசு அக்கறை கொள்ளவில்லை.

ஐ.நா.தீர்மானத்தின் படி உள்ளக விசாரணைகளை முன்னெடுப்பதாக கூறி உள்ளார்கள்.அதில் எமது பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என கூறினாலும், இந்த அரசு கால நீடிப்பை மேற்கொள்ளவே முயற்சித்துள்ளது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு மக்களுக்கு அபிவிருத்தியை மேற்கொள்வதாக வெறும் வாய்ப் பேச்சுடன் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் தள வைத்தியசாலையை தரமுயர்த்த ஜனாதிபதி உத்தரவு!

## நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் தெரிவிப்பு






**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் தள வைத்தியசாலையைத் தரமுயர்த்த அவசரமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைசல், ஜனாதிபதி அவர்களிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து ஜனாதிபதி அமைச்சர்களான நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பேராசிரியர் சந்தன ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்றததுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக, நாடாளுமன்ற உணவகத்தில் பிரதமர், இவ்விரு அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சர்களுடன் உணவருந்திக் கொண்டிருந்த வேளையில் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசப்பட்டுள்ளது.

இதன்போது சுகாதார அமைச்சரிடம், உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்த ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டது.

மாகாண நிதி ஒதுக்கீட்டில் அதிக முன்னுரிமையை புத்தளம் தள வைத்தியசாலைக்கு வழங்குமாறு அமைச்சர் பேராசிரியர் சந்தனவிடமும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் தெரிவித்தார்.



# பங்களாதேஷ் ஊடகத்துறை பேராசிரியர் கபில் கானுடன் மீடியா போரம் சந்திப்பு!

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் டஃபோடில் சர்வதேச பல்கலைக்கழகத்தின் (Daffodil International University) ஊடகம் மற்றும் தொடர்பாடல் துறை இணைப் பேராசிரியர் அப்துல் கபில் கானுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (13) கொழும்பில் இடம்பெற்றது.

போரத்தின் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் தலைமையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஊடகத்துறை மேம்பாடு தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

பங்களாதேஷிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் முஸ்லிம் மீடியா போரத்துக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்துவதுடன் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி நெறிகள் மற்றும் வாய்ப்புகளை பகிர்ந்து கொள்வது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

குறிப்பாக இலங்கையில் ஊடக பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பங்களாதேஷ் பல்கலைக் கழகங்களில் பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில்களை பெற்றுக்கொடுத்தல், டஃபோடில் சர்வதேச பல்கலைக்கழகத்தின் மூலம் இலங்கை ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், ஊடக மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதில் இணைந்து பணியாற்றுதல், இலங்கை – பங்களாதேஷ் ஊடகவியலாளர்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தி எல்லை தாண்டிய அறிக்கையிடல்களை (Cross Border Reporting) முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்களும் அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.







# முல்லைத்தீவு உள்ளக அரங்கில் மாகாண மல்யுத்த பயிற்சி நெறி!

(பா.சதீசன்)

வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப் பிரிவின் ஒழுங்கமைப்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு நாள்கள் இடம்பெற்ற மல்யுத்த பயிற்சி முகாமை மாவட்ட உள்ளக விளையாட்டரங்கில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

வடக்குமாகாணவிளையாட்டுதிணைக்களத்தின் குறித்தொதுக்கபட்ட நிதி ஒதுக்கீட்டில் 60 மல்யுத்த வீரர்களுக்கான பயிற்சி நெறியில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாண வீரர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கான மல்யுத்தப் பயிற்சியைத் தேசிய மல்யுத்த பயிற்றுனர்கள் ஏ.திருச்செல்வம் – மட்டக்களப்பு, என். நிஷேத் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி ச.மஞ்சுளாதேவி, விளையாட்டு திணைக்களத்தின் சிரேஷ்ட மாவட்ட தலைமைப்பீட விளையாட்டு அலுவலர் எஸ். சதானந்தன், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உடையார்கட்டில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்கு சீல் வைப்பு!

## உரிமையாளருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டம்



(பா.சதீசன்)

உடையார்கட்டில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகத்துக்குச் சீல் வைக்கப்பட்டதுடன் உரிமையாளருக்கு எதிராக 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு உடையார்கட்டு பகுதியில் இயங்கிவரும் பிரபலமான உணவகமொன்றில் விற்பனை செய்யப்பட்ட உணவு பொதியில் புழுக்கள் காணப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது.

இது தொடர்ந்து புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்களால் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு ஏற்ப உணவகத்தில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை குறித்த உணவகம் சீல் வைக்கப்பட்டது. அத்துடன் கடை உரிமையாளருக்கு எதிராக 35 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி அந்தப் பகுதியைச் சேர்ந்த நபர் மதிய உணவுக்காக ஐந்து பார்சல் உணவுகளை வாங்கிச் சென்று உணவை அவிழ்த்தபோது மீன் பொரியலுக்குள் புழுக்கள் இருப்பது வெளிப்பட்டுள்ளது. சம்பவத்தால் அதிர்ச்சியடைந்த அவர் சுகாதார பரிசோதகரிடம் உடனடியாக முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு கிடைத்தவுடன் சம்பவ இடத்துக்குச் சென்ற சுகாதார அதிகாரிகள் உணவகத்தை ஆய்வு செய்தபோது, சுகாதார விதிமுறைகள் கடுமையாக மீறப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் குழுவினர் சம்பவத்தை விசாரணை செய்து, உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

அதற்கமைய நேற்று (14) முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கானது எடுத்துகொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து உணவக உரிமையாளருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. குறித்த உணவகத்தை சீல் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

அதற்கமைய இன்றுமாலைஉடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் குறித்த உணவகத்துக்குச் சென்று உணவகத்தின் திருத்த வேலைகள் நிறைவுபெறும் வரை உணவகத்தைச் சீல் வைத்திருந்தனர்.

பொதுமக்களின் சுகாதாரத்தை பாதிக்கும் வகையில் உணவு விற்பனையை மேற்கொள்ளும் எந்த நிலையத்துக்கு எதிராகவும் எதிர்காலத்திலும் கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.





# அபாகஸ் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா

(கொட்டகலை நிருபர்)

ஹோமெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களின் மூளை விருத்தியையும் சிந்திக்கும் ஆற்றலையும் அதிகப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட அபாகஸ் (Abacus) பரீட்சையில் சித்தி பெற்ற 261 மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கொழும்பு றோயல் கல்லூரியின் நவரஹகல மண்டபத்தில் தலைமை அதிகாரி டாக்டர் செந்தில் குமார் பெருமாளின் ஆலோசனைக்கமைய நிறுவனத்தின் உதவி இயக்குனர் ஷியாமளா கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

மூளை விருத்தியையும் சிந்திக்கும் ஆற்றலையும் அதிக படுத்தும் நோக்கத்தில் நடத்தப்பட்ட பரீட்சையில் கொழும்பு, ஹட்டன், சம்மாந்துறை, நோர்வூட், பதுளை, நாவலப்பிட்டி, அக்கரைப்பற்று



ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

விழாவில் சிறப்பு அதிதிகள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்த இதேவேளை, கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.







# எஸ்.ஐ.ஆரை ஆதரித்து அ.தி.மு.க. நீதிமன்றம் சென்றது வெட்கக்கேடு

## முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) குறித்து நாடே புலம்பும்போது, அதை ஆதரித்து அ.தி.மு.க. உச்சநீதிமன்றம் சென்றது வெட்கக்கேடானது என்று கொளத்தூரில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

சென்னை, கொளத்தூர் தொகுதியில் நேற்று 'என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி' தலைப்பில் பாக முகவர்கள், நிர்வாகிகள் கூட்டம் தமிழக முதல்வரும் கொளத்தூர் தொகுதி உறுப்பினருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் உரையாற்றுகையில்,

"இன்றைக்கு நாம் எங்கு சென்றாலும் எஸ்.ஐ.ஆர். பற்றிதான் பேசுகின்றனர். மக்கள் ஒவ்வொருவரும், நாங்கள் இந்திய குடிமக்கள்தான் என்று நிரூபிக்க வேண்டிய சூழ்நிலையில், கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். காரணம், மக்களின் வாக்குரிமையே பறிபோகும் அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய ஆட்சியாளர்கள் இத்தகைய சூழலை உருவாக்கியுள்ளனர். விசாரணை அமைப்புகளைப் போல் தேர்தல் ஆணையத்தையும் பயன்படுத்தி அப்படி ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளிப்படையாகவே வாக்குத் திருட்டு பற்றி குற்றஞ் சாட்டியுள்ளதுடன், ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே, நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழகத்தில் உண்மையான வாக்காளர் ஒருவர்கூட பட்டியலில் இருந்து விடுபட்டுவிடக் கூடாது. இதற்காகதான் தி.மு.க. நீதிமன்றம் சென்றுள்ளது. மக்கள் மன்றத்திலும் விளக்குகின்றோம். அனைத்து கட்சிக்கூட்டம், ஆர்ப்பாட்டம் என நம் உணர்வுகளையெல்லாம் தொடர்ந்து வெளிப்படுத்தியிருக்கிறோம். வழக்கமாக தேர்தல் வெற்றிக்கான பொறுப்பை ஒப்படைப்பது போல், மக்களுடைய வாக்குரிமையைப் பெற்றுத்தரும் பெரும் பொறுப்பையும் கூடுதலாக உங்களிடம் ஒப்படைத்துள்ளோம். நமக்கு அதிக கால அவகாசம் இல்லை. நாம் வாக்காளராக சேர ஒரு படிவம் கொடுக்கிறார்கள். 10 நாள் கள் முடிவடைந்து விட்டன. மீதி இருப்பது எத்தனை நாள்கள் என்று உங்களுக்குத் தெரியும். அந்த விண்ணப்பத்தை நாம் வாங்கிப் பார்க்கும் போது, நமக்குப் பெரிய குழப்பம் வருகிறது.

தமிழகம் இதுகுறித்து புலம்பிக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி போராட்டம் மூலம் எதிர்ப்பை பதிவு செய்து வருகிறார். கேரளாவில் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து போராட்டம் நடத்தி, சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டு எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

ஆனால், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறது. அது எதிர்க்கட்சியாக இல்லை. இப்படியே சென்றுகொண்டிருந்தால் எதிர்க்கட்சியாக மட்டுமல்ல. உதிரிக் கட்சியாகக் கூட இருக்க முடியாத ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும். அதாவது தங்களுடைய கட்சியை டில்லியில் கொண்டுசென்று அடமானம் வைத்துவிட்டு அந்த எஸ்ஐஆரை ஆதரிக்கின்றனர். எஸ்.ஐ.ஆரை எதிர்த்து எல்லா கட்சிகளும் உச்சநீதிமன்றம் செல்கிறோம்.

ஆனால், இங்கு எதிர்க்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க. அதை ஆதரித்து உச்சநீதிமன்றம் செல்லும் வெட்கக்கேடு நடைபெறுகிறது. மக்களைச் சந்திக்க அவர்களுக்குத் தெம்பு இல்லை. அதனால்தான் இந்தக் குறுக்கு வழியை அவர்கள் நாடியிருக்கிறார்கள். எனவே, தொகுதி முழுவதும் ஒரு பூத் விடாமல் சுற்றிச் சுழல வேண்டும். அந்தக் கணக்கீட்டுப் படிவங்களை நிரப்ப நாம் மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். கொளத்தூரில் வெற்றி என்பது, நிர்ணயிக்கப்பட்ட வெற்றிதான். அதில் எந்த சந்தேகமும் இல்லை." என்று தெரிவித்தார்.

# திருட்டு வாக்களிக்க முடியாது என்பதால் எஸ்.ஐ.ஆரை எதிர்க்கும் தி.மு.க கூட்டணி

## பழனிசாமி பகிரங்க குற்றச்சாட்டு



திருட்டு வாக்களிக்க முடியாது என்பதால்தான் எஸ்.ஐ.ஆரை தி.மு.க. எதிர்ப்பதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"தி.மு.கவும் அதன் கூட்டணி கட்சிகளும் பல்வேறு விமர்சனங்கள் செய்தன. அதையெல்லாம் மீறி தேசிய ஜனநாயக கூட்டணி பிஹார் தேர்தலில் மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளது. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. அதேபோல, வேறு இடங்களுக்கு குடி பெயர்ந்தவர்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. எஸ்.ஐ.ஆர். பணி மேற்கொள்ளும் போது, இவர்களை எல்லாம் கண்டறிந்து நீக்கப்பட்டு உண்மையான நேர்மையான வாக்காளர்களைக் கொண்டு பட்டியல் தயாரிக்கப்படும்.

இந்த பணியின்போது பி.எல்.ஓக்கள் வீடுவீடாகச் சென்று படிவத்தை வழங்கிடவேண்டும். ஆனால், தமிழகத்தில் இப்பணி சுணக்கமாக இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் பி.எல்.ஓவாக நியமிக்கப்பட்டவர்கள் 4 ஆம் வகுப்புதான் படித்துள்ளனர். இதை நாங்கள் தெரிவித்தும் மாற்றாமல், வேண்டுமென்றே திட்டமிட்டு எஸ்.ஐ.ஆர். பணி முறையாக நடைபெறக்கூடாது என சில அதிகாரிகள் செயல்படுகின்றனர். தி.மு.க. அரசு வாய்மொழி உத்தரவாக இவ்வாறு சொல்லி இருப்பதாக நாங்கள் அறிகிறோம். இது கண்டிக்கத்தக்கது.

பி.எல்.ஓ-க்களாக தகுதியானவர்களை நியமிக்காததால் பல்வேறு குளறுபடிகள் ஏற்படுகின்றன. இனி மேலாவது தேர்தல் ஆணையம் விழிப்போடு செயல்பட்டு, எஸ்.ஐ.ஆர். பணிக்கு முரண்பாடாக செயல்படுவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் இறந்தவர், இடம் பெயர்ந்தவர், இரட்டை வாக்குரிமை உடையோர் குறைந்தபட்சம் 5 ஆயிரம் பேர் உள்ளனர். இதுகுறித்து நாங்கள் தொகுதிவாரியாக விவரங்களை கொடுத்தும் நீக்கவில்லை. இதனை பயன்படுத்தி, தி.மு.க. தேர்தல் நேரத்தில் கள்ள வாக்களித்து வெற்றி பெற்று வருகிறது. திருட்டு வாக்களிக்க முடியாது என்பதால்தான் எஸ்.ஐ.ஆரை எதிர்க்கிறார்கள். சென்னை மாநகராட்சி தேர்தலில் திருட்டு வாக்களிக்க வந்தவரை பிடித்து கொடுத்ததற்காக 15 நாள் சிறையில் அடைத்தார்கள். அப்படிப்பட்ட நிலை, வரும் தேர்தலில் வரக்கூடாது என்பதற்காகத்தான் எஸ்.ஐ.ஆரை நாங்கள் ஆதரிக்கிறோம்." என்று தெரிவித்துள்ளார்.






# 4 பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

## அமெரிக்காவில் பதற்றம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் புல்லர்னில் உள்ள 4 பாடசாலைகளுக்கு தொடர் வெடிகுண்டு மிரட்டல்கள் வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த பகுதியில் உள்ள சன்னிஹில் பாடசாலை, யூனியன் பாடசாலை, டிராய் மற்றும் பெர்ன் டிரைவ் ஆகிய பாடசாலைகளுக்கு தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அந்தப் பாடசாலையில் இருந்து மாணவர்கள் வெளியேற்றப்பட்டதுடன், பின்னர் பாடசாலைகள் மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து, வெடிகுண்டு நிபுணர்கள் 4 பாடசாலைகளிலும்




சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிகுண்டு மிரட்டல் யாரால் விடுக்கப்பட்டது என தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# திருப்போரூரில் பயிற்சி விமானம் விபத்து: பாராசூட் மூலம் உயிர் தப்பினார் விமானி

திருப்போரூர் அருகே இந்திய விமானப்படை பயிற்சி விமானம் கீழே விழுந்து வெடித்து சிதறியது. இதில் விமானி பாராசூட் மூலமாக குதித்து உயிர் தப்பினார்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் விமானபடை பயிற்சி தளம் உள்ளது. இங்கிருந்து நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புறப்பட்ட பயிற்சி விமானம் திருப்போரூர் அருகே வானில் பறந்து கொண்டிருந்தபோது, விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது

இதனால், விமானி கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அளித்து விட்டு, விமானத்தை கீழ்நோக்கி இறக்க முயற்சி செய்தநிலையில், விமானம் கட்டுப்பாட்டை இழந்ததால் விமானி பாராசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். பயிற்சி விமானம் புறவழிச் சாலை அருகே உள்ள உப்பளம் பகுதியில் விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியுள்ளது.



# ஆளில்லா விமானம், ஏவுகணைகள் மூலம் உக்ரைன் மீது தாக்குதலை நடத்திய ரஷ்யா

ரஷ்யா தனது ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைகள் மூலம் உக்ரைன் மீது மிகப்பெரிய வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

உக்ரைனிய தலைநகர் கீவ்வை குறிவைத்து நேற்று அதிகாலை முதல் ரஷ்ய படைகள் தீவிரமான வான்வழித் தாக்குதலை அரங்கேற்றியுள்ளது.

ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் குறைந்தது 8 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், ரஷ்யாவின் இந்த தாக்குதல் தலைநகர் கீவ்வின் முக்கிய உள்கட்டமைப்புகளான அடுக்குமாடி குடியிருப்புகள், பாடசாலைகள், மருத்துவமனை மற்றும் நிர்வாக கட்டடங்கள் ஆகியவற்றை சேதப்படுத்தியுள்ளது.

தலைநகர் கீவ்வில் 6 பேர் வரை கொல்லப்பட்டு இருப்பதை அங்குள்ள நகர அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ரஷ்யாவின் தாக்குதல் குறித்து உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வெளியிட்ட அறிக்கையில், இரவு முழுவதும் ரஷ்யா கிட்டத்தட்ட 430 ட்ரோன்கள் மற்றும் 18 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த தாக்குதலுக்கு உக்ரைனின் வான் பாதுகாப்பு அமைப்புகள் மூலம் தக்க பதிலடி கொடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.









கனடா முரசு
சனிக்கிழமை | 15/11/2025

## கனடாவில் கோர விபத்து; தமிழ் பெண் உயிரிழப்பு

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் தமிழ் பெண் ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படு 02▶




# கனடாவை குறிவைக்கும் சீனா, ரஷ்யா பாதுகாப்பு உளவுத்துறை எச்சரிக்கை

கனடாவின் அரசு மற்றும் தனியார் துறைகள் வெளிநாட்டு எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாக கனடா பாதுகாப்பு உளவுத்துறை (CSIS) இயக்குநர் டான் ரோஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சீனா மற்றும் ரஷ்யா நாட்டின் ஆர்க்டிக் பிராந்தியத்தில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவரின் ஆண்டு உரையில், சீன உளவாளிகள் கனடியர்களை சமூக ஊடகங்கள் மற்றும் ஆன்லைன் வேலைவாய்ப்பு தளங்கள் மூலம் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்ததாகவும், அரசு திட்டங்கள், இராணுவத் தகவல்கள் போன்றவற்றை பெற முயன்றதாகவும் கூறியுள்ளார். 02▶





# 1 மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருளுடன் ஒருவர் கைது

கனடாவில் 1 மில்லியன் டொலர் பெறுமதியான போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொக்கெய்ன், மெத்தபெட்டமைன் மற்றும் பெண்டனில் போன்ற போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனிடையே, கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 29 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.




# கனடாவின் டொராண்டோவில் அதிகரிக்கப்படும் அபராதங்கள்

கனடாவின் டொராண்டோவில் பனிப்பொழிவு ஏற்படும் காலங்களிலான வழித்தடங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை நிறுத்துவோருக்கான அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வீதிகளை மறைத்து வாகனங்களை நிறுத்தும் ஓட்டுநர்களுக்கான அபராதம் 200 டொலர்களிலிருந்து 500 டொலராக அதிகரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டொராண்டோ மாநகரசபை இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

பனிக்கால வழித்தடங்களில் வீதிகளை மறைத்து வாகனங்களை நிறுத்தும் ஓட்டுநர்களுக்கான அபராதம் நகரசபையினால் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நகரத்தின் பனிக்கால பராமரிப்பு திட்டத்தை மேம்படுத்தும் விரிவான முயற்சியின் ஒரு பகுதியாகும் எனவும் நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் பதிவான பாரியளவு பனிப்பொழிவைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டொராண்டோவில் பனிப் பராமரிப்பு திறனை மேம்படுத்தும் இந்த முடிவு, வரவிருக்கும் குளிர்காலத்தில் போக்குவரத்து சிக்கல்களை குறைக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த குளிர்காலத்தில் பனிப்பொழிவு அகற்றும் நடவடிக்கைகள் முறையாகமேற்கொள்ளப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

இந்த விபத்து சம்பவம் கடந்த புதன்கிழமை கனடா டொராண்டோவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 34 வயதான சிந்துஜா ஜீவராஜ் என்ற பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 47 வயதான ஜீவராஜ் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Markham Road மற்றும் Finch Avenue East ஆகிய சந்திப்புக்கு அருகிலுள்ள இரவு 7:45 மணியளவில் விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து மீட்பு குழுவினர் அங்கு சென்றனர்.

எனினும் படுகாயம் அடைந்த பெண் உயிரிழந்துள்ளார். காயமடைந்த ஆண் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இது திட்டமிட்டு நடத்தப்பட்ட விபத்தா அல்லது தற்செயலானதா என டொராண்டோ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கனடாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனா, ஆர்க்டிக் பகுதியில் பொருளாதார அடிப்படை அமைக்க விரும்புகிறது. அதேசமயம், ரஷ்யாவின் நிலைப்பாடு மிகவும் கணிக்க முடியாததுமாக மற்றும் தாக்குதல் மிகுந்ததுமாக உள்ளது.

CSIS, பல கனடிய நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐரோப்பாவில் உள்ள போலி நிறுவனங்கள் ரஷ்ய முகவர்களுடன் தொடர்புடையவை என்றும், அவை கனடிய தொழில்நுட்பங்களை வாங்கி, பின்னர் ரஷ்யாவின் உக்ரைன் போரில் பயன்படுத்தப்படுவதாகவும் ரோஜர்ஸ் கூறியுள்ளார்.

மேலும், CSIS கடந்த ஆண்டு ஈரான் உளவுத்துறை கனடாவில் உள்ள சில நபர்களை இலக்காகக் கொண்டு உயிருக்கு ஆபத்தான தாக்குதல்களை திட்டமிட்டதை தடுத்து நிறுத்தியதாகவும் தெரிவித்துள்ளது.

ரோஜர்ஸ், “கனடா, இயற்கை வளங்கள் நிறைந்த முன்னேற்றமான பொருளாதாரமும், NATO, G7, Five Eyes போன்ற கூட்டணிகளில் முக்கிய பங்கும் வகிப்பதால், வெளிநாட்டு உளவுத்துறைகளின் முக்கிய இலக்காக உள்ளது” என கூறியுள்ளார்.

அவரின் எச்சரிக்கையில், CSIS தற்போது நடத்தும் தீவிரவாத விசாரணைகளில் 10 சதவீதம் வரை 18 வயதிற்குக் குறைவானவர்கள் தொடர்புடையவர்கள் எனவும், இது கவலைக்குரியதாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்த எச்சரிக்கை, கனடாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் ஆர்க்டிக் பிராந்தியத்தின் மூலாதார முக்கியத்துவம் குறித்து புதிய விவாதங்களை எழுப்பியுள்ளது.




# டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் 2025; மாபெரும் இலக்கியப் பண்பாட்டு பெருவிழா

டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் - 2025, கனேடிய வரலாற்றில் முதன்முறையாக நடைபெறவிருக்கும் தமிழ் பேசும் மக்களை ஒருங்கிணைக்கும் மாபெரும் இலக்கியப் பண்பாட்டு பெருவிழாவாக அமைகின்றது.

இந்நிகழ்வின் சமூகப் பங்காளர்களாக கனடியத் தமிழர் பேரவை மற்றும் ஐக்கிய இலங்கை முஸ்லிம் பேரவை - கனடா இணைந்துள்ளன.

இந்நிகழ்வு உலகம் முழுவதும் பரந்துவாழும் தமிழ் பேசும் சமூகங்களை மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டின் வழியாக ஒருங்கிணைக்கும் ஒரு அரிய நிகழ்வாக அமையவிருக்கின்றது.

தமிழ் என்பது ஒரு மொழியைத் தாண்டி உயிர்ப்புடன் இருக்கும் பண்பாட்டு பாரம்பரியமாகும். உலகில் செம்மொழி அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ள பத்து செம்மொழிகளில் ஒன்றாக மதிக்கப்படும் தமிழ் 3000 ஆண்டுகள் நீடித்த இலக்கிய மற்றும் பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளது.

தமிழ் மொழி பத்து நாடுகளில் அதிகாரப்பூர்வ, தேசிய அல்லது நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்படுள்ளதோடு, 65 நாடுகளில் 80 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படுகிறது. டொரோண்டோ புத்தக அரங்கம் எங்கள் செழுமையான மொழியின் நிலைத் தன்மையையும், கலை நயத்தையும், மக்கள்களை ஒருங்கிணைக்கும் ஆற்றலையும் பெருமையுடன் போற்றுகிறது.

இந்த புத்தக அரங்கத்தின் நோக்கம் தமிழ் மொழி பேசுகின்ற பல்வேறு மக்கள்களை தமிழ் மொழி, இலக்கியம், அறிவியல் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தின் அடையாளமாக ஒருங்கிணைத்தல், அவர்களது பங்களிப்பை தமிழ் மொழியின் பயன்பாடு, மேம்பாடு, நிலைத்தன்மை, என்பவற்றை உறுதி செய்வதும், அவர்களது ஈடுபாட்டை அதிகரித்தலுமாகும். உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து இந்த இலக்குகளை அடைவதே இந்நிகழ்வின் உன்னதமான தூரநோக்காகும்.

இரு நாள் நிகழ்வாக நடைபெறும் இந்த புத்தக அரங்கத்தில் ஈழத் தமிழர்கள், இலங்கை முஸ்லிம்கள், மலையக தமிழர்கள், இந்தியாவின் தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட உலகம் முழுவதிலுமுள்ள தமிழ் பேசும் சமூகங்களின் புத்தகங்கள், வெளியீடுகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்தக் கண்காட்சி, உலகத் தமிழர்களுக்கிடையேயான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கி, இலங்கையிலும் புலம்பெயர் தமிழர் சமூகத்திலும் அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான ஒற்றுமையை வலியுறுத்துவதாக அமையும்.

டொரோண்டோ தமிழ் புத்தக அரங்கம் 2025 டிசம்பர் 6 சனிக்கிழமை மற்றும் 7 ஞாயிற்றுக்கிழமை திகதிகளில் Malvern Family Resource Centre, 90 Littles Road, Scarborough, Ontario வில் நடைபெறவுள்ளது. இரு நாள்களிலும் புத்தக வெளியீடுகள், எழுத்தாளர் உரைகள், கலந்துரையாடல் அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளைப் காட்சிப்படுத்த புத்தக மேசை ஒன்றை பதிவு பதிவு செய்துகொள்ள முடியும். அதே போல புத்தக வெளியீட்டு வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் பதிவு செய்யலாம்.

டொரோண்டோ தமிழ் புத்தகக் கண்காட்சி அறிவு, ஒற்றுமை மற்றும் பண்பாட்டு மேன்மையின் பெருமைமிக்க அடையாளமாக திகழும் என்பது குறிப்பிடத்தக்கது.